பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.50

நடர்: 6 பிரசோற்பத்தி ஆண்டு வைகாசி 06 திங்கட்கிழமை [20 —05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 167

★ வடக்கு—கிழக்குப் பகுதிகளில்

தொண்டர் நிறுவனங்களின் சேவை தொடர வற்புறுத்து!

உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 20

சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் இப்போது வடக்கு - கிழக்கில் ஆற்றி வரும் சேவை தொடரப்பட வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அந்த மனிதாபிமான சேவை நிறுத்தப்படக்கூடாது.

இவ்வாறு தொண்டர் நிறுவனங்களுக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் வற்புறுத்தி உள்ளனர்.

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் 15 க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஐ. நா. அகதிகள் விவகார நிலையங்களும் மீதும், பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் மீதும் வானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது சேவையை மீள்பரிசீலனை செய்யும் கட்டத்தில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

அமைச்சரவையை பிரேமா விரைவில் மாற்றுவார்?

அமைச்சரவையில் பெரிய மாற்றங்களை ஜனாதிபதி பிரேமதாஸா விரைவில் செய்யக்கூடிய சாத்தியம் உருவாகியிருப்பதாக நகரின் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐ. தே. க. பிரமுகர்கள் செயலாற்றிய விதம் பற்றிய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இந்த அடிப்படையில் தான் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றும்—

அமைச்சர்களாக புதுமுகங்கள் இடம்பெறலாம் என்றும் நகரின் செய்தி ஸ்தாபனத்தின் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக [illegible] வானொலி [illegible] தெரிவித்தது.

[ஒ.எ]

200 லொறிகள் வடக்கே வரத் தயார் நிலையில்

கொழும்பு, மே 20

உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் செல்ல சுமார் 200 லொறிகள் அனுராதபுரத்திலும், வவுனியாவில் சர்வோதய முகாமிலும் தயார் நிலையில் இருக்கின்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவற்றில் 60 [illegible] லொறிகள் வரை [illegible] கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமானவை என்றும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி

அப்ப... மந்திரிமார் திரிசங்கு சொர்க்க நிலையிலை இருப்பினம் எண்டு சொல்லுங்கோ.....!

முஸ்லிம் மக்களிடம் இருந்து கிழக்கில் ஆயுதங்கள் மீட்பு!

கிழக்கு மாகாணம் காத்தான்குடி பகுதி முஸ்லிம் வீடுகளில் இருந்து ஏ. கே. 47 ரகத் துப்பாக்கி, ரி—56 ரகத் துப்பாக்கி, ரி. பி. ஆர் ஷொட்கன்கள் ஆகியவை உட்பட பல ஆயுதங்களையும் ரவைகளையும் பொலீஸார் கைப்பற்றினர் என்று இப்பகுதியில் இடம் பெற்ற தேடுதல் வேட்டையின் போது இவை கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காகவே இந்த ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன என்று கருதப்படுவதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 பேர் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

விடுதலைப் புலிகளால் பல்வேறு காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த 22 பேர் இன்று மாலை 4 மணியளவில் வலிகாமம் பிரிவு—கன்னாகம் செயலகத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். செயலகப் பிரிவு இதனை நேற்று அறிவித்தது.

22 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:

பிரான்ஸிஸ் டானியல் [கிளிநொச்சி], நல்லையா இராசலிங்கம் [அச்சுவேலி], நவரத்தினம் சந்திரவதனன் [மாதடி], ஞானமுத்து கருணாகரன் [உடுவில்], பூச்சி புஷ்பரத்தினம் [கிளிநொச்சி], பிறைசூடி சிறிவஸ் [கிளிநொச்சி], ஜீவராசா சிவகுமார் [விசுவமடு], நாகலிங்கம் மகேந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

★ இன்று இந்தியத் தேர்தல்

புதுடில்லி, மே 20

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலின் முதல் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்திய வரலாற்றில் இல்லாத அளவு இம்முறை பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இன்று 9 மாநிலங்களிலும், 4 யூனியன் பிரதேசங்களிலும் வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது.

பிரதமர் சந்திரசேகர் மற்றும் முன்னாள் பிரதமர்களான ராஜீவ் காந்தி, வி. பி. சிங், துணைப் பிரதமர் தேவிலால், மேனகா காந்தி, வாஜ்பாய், அத்வானி உட்பட பல முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் வாக்குப் பதிவு இன்று நடைபெறுகின்றது.

[உ-3]

ஸ்ரீலங்காப் படைக்கு 'ஜெட்' விமானங்கள்!

ஜெட் விமானங்களை பயன்படுத்துவதன் மூலம் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை அரச தீவிரப்படுத்த இருப்பதாக தெரிகிறது என்று இலங்கைச் சர்வதேச வானொலி தனது மாலை செய்தியறிக்கையில் நேற்றுத் தெரிவித்தது.

இரண்டு ஜெட் விமானங்கள் இலங்கை வந்து சேர்ந்துள்ளன என்றும்—

அவற்றை ஓட்டும் விமானிகளுக்கு வடக்கு - கிழக்கு தவிர்ந்த வேறு விமான நிலையம் ஒன்றில் வைத்து பயிற்சி வழங்கப்படுவதாகவும் அச் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

"ஜே-7" ரக சண்டை விமானங்கள் விரைவில் இலங்கை வந்து சேர உள்ளன என்றும்—

எத்தனை ஜே-7 ரக விமானங்கள் வந்து சேரவிருக்கின்றன என்பது பற்றிய தகவல் தெரியவில்லை என்றும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டது.

"மலிவு விலையில் ஆயுதங்கள்—அரசுக்கு சீனா வழங்குகின்றது—ஜெட் விமானங்களும் கிடைக்குமாம்"—என்ற தலைப்புச் செய்தி கடந்த நவம்பர் 18 ஆம் திகதி உதயனில் பிரகாரமாகி இருந்தது தெரிந்ததே. [உ]

பிரங்கித் தாக்கு

தொண்டமனாறு கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர் [ஒ-126]

சாட்சியங்களைப் பதிய அல்விஸ் பாரிஸ் செல்வார்

கொழும்பு, மே 20

வவுனியா வாகனத்தாக்குதலில் காயமடைந்த மூன்று பிரெஞ்சு மருத்துவத் தொண்டர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக ஜனாதிபதி நியமித்த தனி ஆணையாளர் இன்னும் சில தினங்களில் பாரிஸுக்குப் பயணமாவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அனுமதியை ஆணையாளர் எல். எச். டி. அல்விஸுக்கு அரச வழக்கு இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பத்து நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணிக்கப்பட்டுள்ள தனி ஆணையாளர், சம்பவ தினம் அன்று பிரெஞ்சு வைத்திய தொண்டர்கள் பயணம் செய்த வாகனத்தை ஓட்டி வந்த இலங்கையரான சாரதியின் வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [இ-ஈ]

● வீதிகளில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், மே 20

தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தப்பியோடி விட்டதால் வீதிகளில் திடீர் சோதனைகள் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள் சிரமத்தைப் பாராது, சோதனை நடவடிக்கை [illegible] விடுதலைப் புலிகள் [illegible] ரங்கள் கேட்டுள்ளன. [ஒ]

பயணிகளின் அவலம்

வவுனியா - கொழும்பு இருவழிப்பாதைப் பயணம்—நேற்றும் தடங்கலின்றி நடைபெற்றது.

பயணிகள் காட்டுப் பாதை ஊடாக — 6 மைல்களுக்கு மேல் — பேரும் சஷ்டத்தின் மத்தியில் நடந்து செல்ல வேண்டிய அவல நிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ 3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த இராமதாஸ் F.R.C.P,D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது; கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: யூனாகிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

பல்கலைக்கழக சான்றிதழ் சன்சுப் பிட்டிக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி இலக்கை வங்கிலோ, உதயன் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16728]

பராசக்தி கிருஷ்ணன் ஆகிய எனது அடையாள அட்டை [407290348V] 15 - 5 - 1991 இல் மானிபாய் வீதிக்கும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன். [16851]

மணமகன் தேவை

யாழ் இந்து செவ்வாய்க் கிழமையுள்ள 36 வயது B. Sc குற்றமுள்ள [illegible] முறையே ஆசிரியைக்கும், [illegible] 27, 30 வயது குற்றமுள்ள எக்கவுண்டன் பெண்களுக்கு எஞ்சினியரும், 25 வயது ஆசிரியைக்கும் மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [16853]

மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து 31 வயது T.A க்கு ஆசிரியையும், 38 வயது ஆசிரியருக்கும், 28 வயது ஆசிரியருக்கும், 32 வயது B.A ஆசிரியருக்கும், 31 வயது B Sc ஆசிரியருக்கும் மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [16856]

யாழ் இந்து செவ்வாய்க் குற்றமுள்ள 31 வயது UK எஞ்சினியருக்கு எக்கவுண்டன் மணப்பெண் தேவை. எம்மிடம் மணமகள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் [16855]

மணமக்கள் தேவை

யாழ் இந்து சைவபோசன 3 சாதி மணமக்களுக்குச் சோதியாகவோ, அல்லது தவிர்வாகவோ மணமக்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமையில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [16854]

அறிவகம்

பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் ஏனைய உபகரணங்கள், பேப்பர் வகைகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கருகில்] [சி-4947]

வகுப்புகள்

Cake Icing. Sugar Craft, General Cookery பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy 71, Nayanmar Road, Nallur, Jaffna. [சி/5872]

அதிபர்கள் சேவை

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி கிரகித்தல், பொது அறிவு, கல்விக் கொள்கைகளை உள்ளடக்கியது. கண்ணன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி-4932]

சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள் 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3.00 மணிவரை சந்திக்கலாம். விபரம் விடுமுறை [16722]

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 09 — 1963

மறைவு: 20 — 04 — 1991

அமரர் நடராஜா மதிதரன்

[சொழும்பு திறந்த பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர், முன்னாள் யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை செய்முறைக் காட்டுனர் (Demonstrator)

உன் பிரிவால் துவருறும்:
யாழ். பல்கலைக்கழக
பௌதிகத்துறை நண்பர்கள்.

[16839]

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. வல்லிபுரம் ஜெகதீசன்

[முன்னாள் பொறியியலாளர் - உர ஆக்க கூட்டுத்தாபனம் எனிகா சிமெந்து லிமிடெட்]

ஆண்டவன் படைப்பு: 7-10-1946

ஆண்டவன் அடியில்: 20-05 1987

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து, எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் எம்மை வழிநடத்தி மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
கல்லாகம். [C/0005]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BITSMANS INSTITUTES MANIPAY

A/L பௌதீகம்

திரு. கணேசன் B. Sc. [Eng.]

91 - (A) வெப்பவியல்
(B) காந்தப் புலம்
(C) மின்னியல்

92 - ஒளியியல்

(விலைகள்)

91 - வினா - விடை வகுப்பு

ஆரம்பம்: 21 - 05 - 1991
செவ்வாய் 6 00 a. m.

[4940]

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 05 - 08 - 1914

விண்ணில்: 30 - 05 - 1990

ஆண்டுத் திதி: 20 - 05 - 1991

அமரர்

கந்தையா இராமலிங்கம்

(உரிமையாளர்; லிங்கம் கபே, சாவகச்சேரி)

பக்கமெல்லாம் இனை பரப்பி, திக்கெட்டும் புகழ் பரப்பி, பாசத்தினை நிலை நிறுத்தி, அன்பாக எம்மை உருவாக்கி, கண்பால் உயர்த்திருந்த [illegible] தந்தையே!! தாரணியை மறந்தீர்களோ! [illegible] தீர்களோ!! உங்களை நினைத்து இறைவனிடம் [illegible] ஆத்ம சாந்திக்காக இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

"வசந்த பவனம்"
புன்னாலைவடமராட்சி - 11 [16841]

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வாழ்வு: 18 — 06 — 1945

விண்ணக வாழ்வு: 21 — 04 — 1991

திருமதி

றெஜினா றீற்றா தியாகராசா

(றீற்றம்மா)

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக
21 - 05 1991 செவ்வாய்க்கிழமை (நாளை)
காலை 6 30க்கு ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உறவினர், நண்பர்களை திருப்பலியில் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

9, தியாகராசா,
46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [16859]

உதயன்

இந்தியத் தேர்தல்

உலகின் மிகப் பெரிய சனநாயக நாடான இந்தியாவின் பத்தாவது பொதுத் தேர்தல் இன்று ஆரம்பமாகிறது. மொத்தம் 55 கோடி மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தியாவின் வரலாற்றிலேயே இந்த வருடத்தில் தான், தேர்தலை ஒட்டி என்றுமில்லாதவாறு வன்செயல்கள் அதிக அளவில் நிகழ்ந்துள்ளன. இத்தேர்தல் வன்செயல்களில் இதுவரையிலேயே, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொலையுண்டுவிட்டனர். அவர்களில் ஒன்பது வேட்பாளர்களும் அடங்குவர்.

இத்தகைய பதற்றமான பின்னணியில் இன்று ஆரம்பமாகி, மூன்று கட்டங்களாக வாக்களிப்பு நடந்து, 27 ஆந் திகதி வாக்கு எண்ணும் வேலைகள் தொடங்கி, தேர்தல் பெறுபேறுகள் முற்றாக வெளியாகி முடிவதற்குள் வன்செயல்கள், குழப்பங்கள் எப்படி ஆகுமோ என்ற கேள்வி உண்டு.

இந்தியாவின் சமீபகால அரசியல் நிகழ்வுகளைப் பொறுத்தவரையில் இன்று ஆரம்பமாகும் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். 1989 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் ஸ்திரமான, உறுதியான சரசாங்கத்தை அமைக்க வழி செய்யவில்லை. அதனால் இந்திய அரசியல் ஓர் அல்லோல கல்லோலப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அவரை நம் 9 இவர்; இவர் அவருக்குக் குழி பறிப்பு; ஒருவர் சமூகத்தை அடுத்தவர் வெட்டுவதில் யார் முந்துவது என்ற போட்டி — இந்தியாவிலே இந்திய அரசியல் கலைந்துவிட்டது.

பரவம் 84 கோடி மக்கள் ஒரு புறம். அவர்கள் சொல்லொணா அவலப்பட, புதுடில்லியிலும், மாநிலத் தலைநகரங்களிலும் அரசியல்வாதிகள் குந்துவெட்டு, குத்துக்கரணம், ஊழல் மோசடி குழுமோளம் என்று நட்டுக்குட்டிச் சுவர் ஆக்கிவிட்டார்கள்!

பொருளாதாரத் துறையில் கூட இந்தியா மிகவும் அடிமட்டத்துக்குப் போய்விட்டது. சர்வதேச நாணய நிதியத்திடம் அளவுக்கு மிஞ்சிக் கடன் இரக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது!

இத்தகைய சூழ்நிலையில் நிலையான, உறுதியான, பலமான அரசு ஒன்று அமைவதற்கும் —

அதன் மூலம் நாட்டின் பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கு வழி செய்வதற்கும் — இன்றைய தேர்தல் வழிகோலுமா என்பதையே இந்திய மக்கள் எதிர்பார்ப்பார்கள்.

ராஜீவ் காந்தி தலைமையான — 106 வயதான-காங்கிரஸ், வி. பி. சிங் தலைமையான தேசிய முன்னணி, அத்வானி தலைமையான பாரதிய ஜனதா ஆகிய மூன்று அணிகளும் கணிசமான மொத்தியில் பலமாக மோதுகின்றன வெற்றி யாருக்கு என்பதை இந்திய மக்களே தீர்ப்பளிப்பர்.

ஈழத்தமிழர் விவகாரமானாலும் சரி, இந்திய - பாகிஸ்தான் உறவானாலும் சரி, இந்தியா, அமெரிக்கா கிடையிலானாலும் சரி, எதுவுமே, எல்லாமே இந்தியாவில் உறுதியான, ஸ்திரமான அரசு ஒன்று தெரிவானால் மட்டுமே அதிலிருந்து மட்டுமே-கணிசமுறையில் பற்றிப் பேச இயலும்.

வேறுபாடு இன்றி அனைவரும் போராட்டத்தில் இறங்க வேண்டும்

சண்டிலிப்பாய்க் கூட்டத்தில் பரா

யாழ்ப்பாணம், மே 20

எதிரி எம் மண்ணை நாளுக்கு நாள் ஆக்கிரமித்து வரும் இந்நிலையில் அதனைத் தடுத்து நிறுத்த நாம் எல்லோரும் ஆயுதப் போராளிகளாக மாறவேண்டும். இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என்ற வேறுபாடின்றி மக்கள் எல்லோரும் போராட்டத்தில் இணைய வேண்டும்:

சண்டிலிப்பாய் ஆலங்குளம் சனசமூக நிலையத்தில் கண்ணமையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவுக்கொள்கைக் முன்னெடுப்பாளர் திரு. பரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 வருடகாலப் போராட்டத்தில் எமது போராட்டம் பல மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இராணுவம் எங்கள் முகாம்களைத் தேடி வந்த நிலை மாறி நாங்கள் இராணுவ முகாம்களைத்தேடி அழிக்கும் நிலை உருவாகியுள்ளது.

அத்துடன் அரசியல் ரீதியாக மக்கள் விழிப்படைந்துள்ளனர். இதனை நடந்து முடிந்த தேதிய எழுச்சி எடுத்துக்காட்டுகின்றது

மேலும் அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மக்கள் எதிர்கொண்டு உணவு உற்பத்திமூலம் அதனை முறியடித்துள்ளனர்.

இதுவரை காலமும் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற போரில் 10 ஆயிரம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் அரைப்பங்கினராவது எம்முடன் இணைந்திருந்தால் நாம் தமிழீழத்தின் பெரும்பகுதியை மீட்டிருப்போம்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். [இ-த]

வெளிக்கள அலுவலர் பதவி: விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் கல்வி நிர்வாகப் பிரிவுக்கு வெளிக்களப் போதனாசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்களை, மாகாண சபையின் கல்வி விவசாய அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார்,

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள், விஞ்ஞானத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூன்று மாத குறுகிய காலப் பயிற்சியைப் பெற்றிருந்தால் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்கள், மாதிரி விண்ணப்பப் படிவம் என்பன, வாசகர் நலன்கருதி உதயன் டணிமலரில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. [அ-15]

தட்டி வான் சேவை

சாவகச்சேரி தொடிகாமத்துக்கான தட்டிவான் சேவை கடந்த 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது [இ-117]

சிறிமா அழைப்பு: தொண்டமான் ஏற்றார்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா விடுத்த அழைப்பை அமைச்சர் தொண்மான் ஏற்றுள்ளார்.

அத்தனால தொகுதியில் தொழிற்சாலை ஒன்றின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் டி. திரு. தொண்டமானை திருமதி சிறிமாவோ டண்டாரநாயக்கா அழைத்திருந்தார்

அதனைத் தன் ஏற்றிருப்பதாக திரு தொண்டமான் தெரிவித்தார் [இ-எ]

ஊரடங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்முனை எருவில் உட்பட 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் நேற்றுக் காலை முதல் 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ-த]

வீரமரணம்

கடந்த 5 ஆம் திகதி வல்வெட்டித்துறைக் கடலில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இடக்கப் போராளியான சுஸ்ஸ் [பொன்னுச்சாமி சருணாகரன்— இலுப்பைக்குட்டி, முருத்தித்துறை] வீரமரணம் எய்தினார்.

வவுனியா சுடுகாடு போல் காட்சி

கிளிநொச்சி, மே 20

வவுனியாவில் கண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் புளியம்குளம் பகுதியில் நீராவி பகுதியில் இருந்து வவுனியா நகரம் வரையுள்ள கண்டி வீதியின் இரு மருங்கும் சுடுகாடு போல் காணப்படுகின்றது

டவிக்க நீராவி, விளக்குவைத்தகுளம், இறம்பைக்குளம், ஒமந்தை மாணிக்கவளவு, பரசங்குளம், நொச்சிமோட்டை, கோடிகுளாங்குளம், தாண்டிக்குளம் ஆகிய இந்தப் பகுதிகளில் காணப்பட்ட சடலங்கள் பலவும் குண்டு வைத்து தகர்த்தப்பட்டுள்ளன

விமானக் குண்டு வீச்சுக்களால் தென்னை மரங்கள் அனேகமானவை முறிந்த நிலையில் காணப்படுகின்றன.

வீதியின் இரு மருங்கும் ஆங்காங்கே பல லொறிகள், சிவமினி ஸ்கூல், ஒரு சில மோட்டார் சைக்கிள்கள் முற்றாக எரிந்த நிலையில் காணப்படுகின்றன

14 மைல் நீளமான இந்தப் பகுதி, வீதியின் இரு மருங்கும் மயானபூமி போல் காட்சி அளிக்கின்றது [இ-76]

ராஜீவ் - வி. பி. சிங் - அத்வானி எந்த அணிக்கு வெற்றி கிடைக்கும்?

இந்திய தேர்தல் களம் பற்றிய கட்டுரையின் முதல் வது பகுதி நேற்று வெளிவந்தது இன்று இறுதிப் பகுதி வெளி வருகிறது.

கடந்த காலங்களில் இராமர் ஆலயப் பிரச்சினையை நம்பியே அரசியல் நடத்தி வந்த பாரதிய ஜனதா [பி ஜே பி] பெருத்த எதிர்பார்ப்புகளோடு தேர்தல் பிரசாரத்தில் இறங்கியிருக்கிறது.

89 அக்டோபரில் வி. பி சிங் ஆட்சி கவிழத் தேர்தல் வரும். கூட்டோடு கூடாக ஆட்சியைப் பிடிக்கலாம் என அத்வானியும், சகபாடிகளும் கட்டிய கோட்டை தவிடு பொடியாகி இருந்தது.

அப்போதே இராமர் ஆலயப் பிரச்சினை ஒரு காலத்துக்கு தாக்குப்பிடிக்க மாட்டாது என்று கருதப்பட்டது. இப்போது அது உண்மையும் ஆகிவிட்டது, பாரதிய ஜனதாவின் பலி பெல்லாம் போனபிறகு வருகிற விருந்தாகவே இந்தத் தேர்தல் இருக்கப் போகிறது. ஆயினும் அத்வானி சற்றும் தளர்ந்ததாகத் தெரியவில்லை 'இந்திய தேசியவாதம்; அது இந்து தர்மம்' என உற்சாகமாக மேடைகளில் முழங்கி வந்தார். என்றாலும் பலம் வாய்ந்த தேசியக் கட்சிகளாக அவர்கள் காலத்தில் உருவெடுத்து [illegible] வந்த மக்கள் உறவுக்கொள்கை முன்னெடுப்பாளர் திரு. பரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 வருடகாலப் போராட்டத்தில் எமது போராட்டம் பல மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது

இராணுவம் எங்கள் முகாம்களைத் தேடி வந்த நிலை மாறி நாங்கள் இராணுவ முகாம்களைத்தேடி அழிக்கும் நிலை உருவாகியுள்ளது.

அத்துடன் அரசியல் ரீதியாக மக்கள் விழிப்படைந்துள்ளனர். இதனை நடந்து முடிந்த தேதிய எழுச்சி எடுத்துக்காட்டுகின்றது

மேலும் அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மக்கள் எதிர்கொண்டு உணவு உற்பத்திமூலம் அதனை முறியடித்துள்ளனர்.

இதுவரை காலமும் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற போரில் 10 ஆயிரம் வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் அரைப்பங்கினராவது எம்முடன் இணைந்திருந்தால் நாம் தமிழீழத்தின் பெரும்பகுதியை மீட்டிருப்போம்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். [இ-த]

தட்டி வான் சேவை

சாவகச்சேரி தொடிகாமத்துக்கான தட்டிவான் சேவை கடந்த 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது [இ-117]

சிறிமா அழைப்பு: தொண்டமான் ஏற்றார்

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா விடுத்த அழைப்பை அமைச்சர் தொண்மான் ஏற்றுள்ளார்.

அத்தனால தொகுதியில் தொழிற்சாலை ஒன்றின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் டி. திரு. தொண்டமானை திருமதி சிறிமாவோ டண்டாரநாயக்கா அழைத்திருந்தார்

அதனைத் தன் ஏற்றிருப்பதாக திரு தொண்டமான் தெரிவித்தார் [இ-எ]

ஊரடங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்முனை எருவில் உட்பட 4 உதவி அரச அதிபர் பிரிவுகளில் நேற்றுக் காலை முதல் 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ-த]

வீரமரணம்

கடந்த 5 ஆம் திகதி வல்வெட்டித்துறைக் கடலில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இடக்கப் போராளியான சுஸ்ஸ் [பொன்னுச்சாமி சருணாகரன்— இலுப்பைக்குட்டி, முருத்தித்துறை] வீரமரணம் எய்தினார்.

எஸ் எஸ் ஜித்

வர்முலாவும் சிங்காதவ் சந்திரசேகர் பக்கம் சேர்ந்து கொண்டார். பின்னர் ராஜீவும் சந்திரசேகரும் இழுபறிப்பட்ட பொழுது இங்கும் காங்கிரஸ் ஆதரவு விலக்கப்பட்டது எனவே மீண்டும் தேர்தல் நடைபெற இருக்கிறது

இந்தியாவின் பிரதமர் வேட்பாளர்களான வி.பி.சிங், ராஜீவ், சந்திரசேகர் ஆகியோர் முறையே இந்த மாநிலத்தின் ஃபதேபூர், அமேதி, பலியா தொகுதிகளில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது

கேரளம்

கேரள மாநிலத்திலும் இம்முறை லோக்சபைத் தேர்தலுடன் மாநிலத் தேர்தலும் நிகழவிருக்கிறது இந்தியாவில் இடதுசாரிகளின் கை ஓங்கியிருக்கும் இரண்டாவது மாநிலம் இதுவாகும் ஆட்சியில் இருக்கும் முதல்வர் ஈ.கே. நயனார் தலைமையிலான இடதுசாரிக் கூட்டணிக்கும், காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையேயான லோரிட்சையாக இத்தேர்தல் அமையப் போகிறது.

தமிழ் நாடு

89 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் தி.மு.க. அரசு நொண்டிக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு இவ்வருட முற்பகுதியில் கலைக்கப்பட்டது.

காங்கிரஸிடமிருந்து தமது ஆட்சிக்குக் கிடைத்த ஆதரவுக்கு விலையாக சந்திரசேகர் இந்த ஆட்சிக் கலைப்பை ஆளுநரின் பரிந்துரை இல்லாமலேயே அமுல் நடத்தினார்.

தற்போது 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் 39 லோக்சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற இருக்கிறது.

தமது அரசு கலைக்கப்பட்டதான செயலின் எதிரொலியாக தமது தேர்தல் வெற்றிக்கு வழிவகுக்கும் எனக் கருதும் கலைஞர் கருணாநிதி —

சென்ற மாநிலத் தேர்தலில் தவறவிட்ட ஆட்சியை இம்முறை எப்படியும் பிடிப்போம் என சங்கல்பம் கட்டி நிற்கும் காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணி மறுபுறம் என ஒரு படியாகத் தமிழ்நாட்டுத் தேர்தல் களம் களைகட்டி நிற்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீரங்கி தாக்குதலால் பெரும் சேதம்:

இந்திய - பாக். எல்லையில் பெரும் பதற்ற நிலை!

இஸ்லாமாபாத், மே 20

காஷ்மீர் பகுதியிலுள்ள இந்திய—பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை தோன்றியதாக அறிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் பீரங்கித் தாக்குதலில் அரசகட்டடங்கள், பாடசாலைகள், மருத்துவமனை, வீடுகள் என்பன சேதமடைந்தன என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

இந்திய இராணுவத்தினரின் தாக்குதலை அடுத்து பாகிஸ்தான் எல்லைப்புறத்திலுள்ள 40,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக் கருதி பாகிஸ்தானின் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி இந்திய உயர்ஸ்தானிகரிடம் பாகிஸ்தான் முறையிட்டுள்ளது.

இதே வேளை—

இந்திய இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலால் கட்டடங்கள் பல தரைமட்டமாக்கப்பட்டிருந்த காட்சிகளை நேற்று ரூபவாஹினி ஒளிபரப்பியது. [த]

ஜெயலலிதாவை எதிர்த்த தி. மு. க. வேட்பாளர் வாபஸ்

தமிழ்நாடு, தர்மபுரி மாவட்டத்தில் அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா போட்டியிடும் பரிகூர் தொகுதியில் — களத்தில் நின்ற — தி. மு. க வேட்பாளர் இ. ஜி. சுரவனம் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டுவிட்டார்.

இத்தகவலை இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

செல்வி ஜெயலலிதா போட்டியிடும் இரண்டு சட்டசபைத் தொகுதிகளில் பர்கூரும் ஒன்று. அவர் போட்டியிடும் மற்றொரு தொகுதி பெரியார் மாவட்டத்தில் உள்ள காங்கேயம் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியில் இருந்து விலகிக் கொண்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [ஒ எ]

தீர்வுக்கு பொது யோசனை உடன் தயாரிக்கப் பணிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொது யோசனைத் திட்டம் ஒன்றை இம்மாத முடிவுக்குள் தயாரித்துச் சமர்ப்பிக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டின் சட்டவரைவுக் குழுவை ஜனாதிபதி பிரேமதாச பணித்திருக்கிறார்.

தமிழ்க் குழுக்கள் சமர்ப்பித்த இனப்பிரச்சினை தீர்வு யோசனையை அரசியல் கட்சிகள் மாநாட்டின் சட்டவரைவுக் குழு கடந்த வியாழன் கூடி பரிசீலனை செய்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இம்மாத முடிவுக்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொது யோசனைத் திட்டத்தைத் தயாரித்து ஆயத்த நிலையில் இருக்கும்படி சட்டவரைவுக் குழுவை ஜனாதிபதி கேட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-ர]

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

25 - 05 - 1991 அன்று இடம்பெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 09 - 06 - 1991 காலை 8-30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன். வருட சந்தாப்பணம் கட்டாத அங்கத்தவர்கள் தமது சந்தாப்பணத்தையும், மதிய உணவு பெற விரும்பும் அங்கத்தவர்கள் அதற்குரிய கட்டணம் ரூபா 30/-தையும் 01-06-1991க்கு முன்னர் திரு என். உமாநாதன், உப பொருளாளரிடம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கத்தவர்களுக்கான தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படவுள்ளது இருந்தும், தற்போதுள்ள நிலைமையில் அழைப்பிதழ் கிடைக்கப்பெறாவிடினும் இவ்வறிவித்தலையும் அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி/5074]

கண்ணீர் அஞ்சலி

19-5-1991 அன்று காலமான யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவி சிவரமணி சிவானந்தன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட
கலைப்பீட மாணவர்கள்

லங்கா சிமெந்து ஊழியருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 20

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த 11 ஊழியர்கள் கொழும்பு தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு செல்லாது விட்டால், சம்பளத்தை நிறுத்துமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

தட்டெழுத்தாளர், கணக்கெழுத்தாளர் தரத்திலுள்ள 11 ஊழியர்களுக்கே இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது.

இடமாற்ற உத்தரவுகளைப் பெற்றவர்களில் எவரும் இன்னும் கொழும்புக்கு செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது [ஒ-3]

நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், மே 20

மன்னார், யாழ் மாவட்டங்களின் முன்னாள் தளபதி லெப். கேர்ணல் ராதாவின் 4ஆவது வருட நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 6-00 மணிக்கு வண்ணார்பண்ணை ஐயனார் கோவில் சனசமூக நிலையமுன்றலில் நடைபெறும்.

கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். [த]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரும் விநாயகருமாகிய அமரர் ச. ஞானப்பிரகாசத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை மறுதினம் [புதன் கிழமை] காலை 9-30 மணிக்கு நடைபெறும் [உ]

இசைக் கருவி

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண நகரின் வடக்கே உள்ள ஓர் ஊரில், கண்டெடுக்கப்பட்ட இசைக் கருவி ஒன்று உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளர் தக்க அத்தாட்சிகளைத் தெரிவித்து அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். அடையாள அட்டையைக் கொண்டு வருதல் அவசியம். [உ]

தடுத்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரன் [வவுனியா], கிளைத் தம்பி மாணிக்கராசா [வவுனியா] கனகசபை தயாபரன் [வவுனியா], அருளானந்தம் சைமன் [வவுனியா], அந்தோனி பேர்னாட் ஜோசப் [வவுனியா], பழனிவேல் சோமின்டராசா [வவுனியா],

மலையாண்டி ராஜா [வவுனியா], கருப்பன் வேலு [வவுனியா], கருப்பையா அழகர்சாமி [வவுனியா] மரி முத்து செல்வம் [வவுனியா], பழனிவேல் நாகநாதன் [வவுனியா], அழகேஸ் பரமசிவம் [வவுனியா], மொட்டையன் துரைசாமி [வவுனியா], சந்தப்பு பரமசிவம் [வவுனியா], பாலசிங்கம் ராஜா [மிருசுவில்].

200 லொறி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத் தலைமையகலுலகத்திடம் இருந்து அனுமதி கிடைத்ததும் அவை வடபகுதி நோக்கிப் புறப்படும் என்றும் தெரியவருகிறது.

உணவுப் பொருள்களுடன் மன்னாரை நோக்கியும் இந்த லொறிகளில் அனுப்பப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [உ]

72, 73 இல் வழங்கப்பட்ட

தேசிய அடையாள அட்டை புதுப்பிக்கப்பட வேண்டும்

கொழும்பு, மே 20

1972, 1973 ஆம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றவர்கள் மீண்டும் அடையாள அட்டைகளைப் புதிதாகப் பெற வேண்டும்.

ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

அந்த இரு ஆண்டுகளிலும் 7 லட்சம் பேர் அடையாள அட்டைகளைப் பெற்றிருந்தனர் என்றும் —

அவர்கள் கிராம சேவையாளர் மூலம் புதிய அடையாள அட்டைகளைப் பெறவிண்ணப்பிக்க வேண்டும் என்றும் ஆட்பதிவுத்திணைக்களம் அறிவித்துள்ளது. [ஒ-6]

மேயர்கள் - உதவி மேயர்கள் தெரிவு இந்த வாரத்தில்

கொழும்பு, மே 20

ஐ. தே. க. கட்டுப்பாட்டிலுள்ள மாநகரசபைகளுக்கான மேயர்கள், உதவி மேயர்கள் நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தலைவர்கள், உபதலைவர்கள் ஆகியோரை இவ்வாரம் ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவு செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைத் தெரிவு செய்யும்போது மூன்று முக்கிய அம்சங்களை ஜனாதிபதி கவனிப்பார் என்று கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர் பெற்றவாக்குகள், அவரின் திறமை, மக்கள் மத்தியில் அவருக்குள்ள செல்வாக்கு ஆகியவையே அந்த அம்சங்களாகும் [இ-எ]

வைத்திய சேவை நிறுத்தம்:

மன்னார், வவுனியாவில் அகதிகள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 20

பிரெஞ்ச் வைத்திய குழுவினரின் நடமாடும் வைத்திய சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டதால், அகதிகளின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக புளொட் வாழ்வு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமைபுரியும் இந்த அமைப்பின் பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும் வரை தனது நடமாடும் வைத்திய சேவை ஆரம்பிக்கப்படமாட்டாது என்று அந்த அமைப்பின் பிரதிநிதி கொழும்பில் தெரிவித்துள்ளார்.

மன்னார், வவுனியா பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கே இந்த அமைப்பினர் நடமாடும் வைத்திய சேவையை நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

தொண்டர் நிறுவனங்களின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உள்ளன. அதனைத் தொடர்ந்தே வடக்கு - கிழக்கில் பணிபுரியும் தொண்டர் நிறுவனங்களுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது.

அரசாங்கம் எந்தப் போக்கினைக் கடைப்பிடித்தாலும் மனிதாபிமான சேவை புரிவதற்கு நிறுவனங்கள், அந்தப் பணியிலிருந்து விலகக்கூடாது என்று உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அரசாங்கம் நடத்திய தாக்குதல்களால் மனம் நொந்த சில நாடுகளின் பிரதிநிதிகள் அரசுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்த போதிலும் — பெரும்பாலானோர் [illegible] ஏற்கவில்லை.

தொண்டர் நிறுவனங்களின் சேவை தொடர வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். [ஒ-3]

மரண அறிவித்தல்

செல்வி சிவரமணி சிவானந்தன்

(யாழ் பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவி)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான செல்வி சிவரமணி சிவானந்தன் 19-5-1991 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவானந்தன் [உப அதிபர், யாழ். இஸ்மானியாக் கல்லூரி] - சுகிர்தம் [இணைப்பாறிய ஆசிரியை, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி] தம்பதியினரின் அன்பு மகளும், சிவகங்கா [யாழ் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி]வின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [20-5-1991] காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி சுகிர்தம் சிவானந்தன்
130, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

[16735]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-05-1991 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org